பேரவை)யில் பொதுப்பணித் துறை குறித்து தொடரப்பட்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை.

6. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளின்மீது பொதுக்கணக்குக் குழு அளித்த முப்பத்தோறாவது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் போக்குவரத்துத் துறை குறித்த பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய நூறாவது அறிக்கை.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திருமதி ரமணி நல்லதம்பி, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் எட்டாவது (பத்தாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்).

சென்னைப் பல்கலைக் கழக மற்றும் மதுரை–காமராசர் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் மதுரை–காமராசர் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் மதுரை–காமராசர் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு அறிமுகம்செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.